**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII, Cr.P.C)**

**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE, RANIPET**

Case No. **SC.No.101/2022**
Prosecution: **PW4**

**Deposition of the witness of LW5**

| | | | |
|---|---|---|---|
| **Name** | திரு.செல்வகுமார் | **District** | வேலூர் |
| **Father's Name** | சக்கரப்பாணி | **Calling** | சிறப்பு உதவி ஆய்வாளர் போக்குவரத்து காவல் நிலையம் வேலூர் |
| **Age** | 53 | **Religion** | -- |
| **Village/Town** | வேலூர் | **Caste** | -- |
| **Taluk** | வேலூர் | **Aadhar Card No.** | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 06th day of January 2026.

எதிரிகள் 1 முதல் 3 ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை:-**

1. நான் தற்போது வேலூர் மாவட்ட போக்குவரத்து காவல் துறை சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். சம்பவ சமயத்தில் நான் அரக்கோணம் மது விலக்கு அமல் பிரிவில் தலைமை காவலராக பணிபுரிந்து வந்தேன்.

2. 22.12.2018 அன்று சுமார் காலை 11.00 மணியளவில் அரக்கோணம் மது விலக்கு அமல் பிரிவுபொறுப்பு ஆய்வாளர் உத்தரவின் பேரில் அவருடன் காவேரிப்பாக்கம் பேருந்து நிறுத்தம் அருகில் திருமதி. க்லோரி, உதவி ஆய்வாளர் மற்றும் நானும் தலைமை காவலர் மஸ்தான் எண்.363 ஆகியோர் வாகன தணிக்கையில் ஈடுபட்டிருந்தோம்.

3. அப்போது உதவி ஆய்வாளர் திருமதி. க்லோரி மற்றும் தலைமை காவலர் மஸ்தான் ஆகியோர் போலிரோ கார் ஒன்றினை மடக்கி பிடித்தார்கள்.

அப்போது அந்த காரில் இருந்து சற்றுத்தள்ளி சந்தேகம் படும்படியான ஒரு நபர் நின்றுக்கொண்டிருந்தார். அவரை விசாரித்த போது அவரது பெயர் ஆனந்தன் என்று தெரிவித்தார். தற்போது ஆஜர் எதிரிகளில் ஆனந்தன் என்பர் யார் என்று என்னால் அடையாளம் காட்ட முடியுமா என்றால் இல்லை. தற்போது அவரது முகம் நினைவில் இல்லை.

4. அவ்வாறு காரின் அருகே நின்றுக்கொண்டிருந்த ஆனந்தன் என்ற நபரை ஆய்வாளரும் உதவி ஆய்வாளரும் தான் விசாரணை செய்தார்கள். ஆய்வாளர் ஆனந்தன் என்பவரை கைது செய்து விசாரணை செய்தார். அந்த சமயத்தில் நானும் ஆய்வாளருடன் இருந்தேன் ஆனால் ஆய்வாளர் விசாரணை செய்த விவரம் பற்றி எனக்கு எதுவும் தெரியாது. ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை.</u>

1. நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ளவாறு எதிரியை ஆய்வாளர் கைது செய்து விசாரணை செய்த சமயத்தில் கையெழுத்து செய்தேனா என்றால் செய்யவில்லை.

2. நான் எதிரியை கைது செய்ததாக சொல்லப்படும் சமயத்தில் என் முன்னிலையில் கார் எதுவும் கைப்பற்றப்படவில்லை என்றும், என் உயர் அதிகாரிகளின் உத்தரவின் பேரில் முன்னுக்குபின் முரணாக பொய் சாட்சியம் அளிக்கிறேன், என்றால் சரியல்ல.

3. விசாரணையின் போது என் முன்னிலையில் எதிரியிடமிருந்து வழக்கு சொத்து எதுவும் கைப்பற்றப்பட்டதா என்றால் இல்லை.

Taken down before me in open court, read over to the witness and admitted by the deponent to be correct.

S/d. A. Daoudh Ammal,
Assistant Sessions Judge/Chief Judicial Magistrate, Ranipet.